
# சட்டு

மாத இதழ்

20

செப்.15 - அக். 14, 198

35 காசு




FREE E BOOKS - www.thamizham.net - TM1872 / Dec 2010




ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்குரிய முதல் நாள் டிக்கெட் விற்பனை பாரத ஸ்டேட் வங்கி வழி நடந்திருக்கிறது. டில்லியில் 11 வங்கி கவுண்டர்களில் விற்பனை தொடங்கிய 3 மணி நேரத்தில் எல்லா டிக்கெட்டும் தீர்ந்திருக்கின்றது. டில்லியில் மட்டுமல்ல, டிக்கெட் விற்பனையான 88 நகரங்களிலும் சில மணி நேரங்களில் ''ஹவுஸ் புல்'' தான்!

'க்யூ'வில் நின்ற 70 பேர்களுக்கு, (பிரபல அரசியல் பிரமுகர்கள் உட்பட) டிக்கெட் கிடைக்கவில்லை. ஆனால் டிக்கட் தீர்ந்து விட்டது என்று அறிவித்தவுடனேயே தொடக்க விழாவிற்குரிய ரூ 100/- டிக்கெட்டுகள், ரூ 300 க்கு 'பிளாக்'கில் வெளியே விற்கப்பட்டிருக்கின்றன

டிக்கெட் விற்பனையில் திட்டமிடப்பட்ட கள்ளத்தனம் நடந்திருக்குமென சந்தேகம் எழுகிறது. ஒரு நாளைக்கு, ஒரு விளையாட்டிற்கு 2,25,000 டிக்கெட்டுகள் விற்கப்படுகின்றன. இதன் மூலம் கிடைக்கும் வருவாய் ரூ 1.5 கோடி. இதில் ஊழல் பெருச்சாளிகள் உட்புகுந்து, பிற நாட்டினர் முன்னிலையில் நமது தேசிய குணத்தைக் காண்பிக்காமல் இருந்து விடுவார்களா? டில்லியில் மட்டுமே 50% டிக்கெட்டுகள் விற்பனைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

எனவே டில்லி கறுப்புச் சந்தைக்காரர்கள், வங்கி, விளையாட்டுக்குழு நபர்களுடன் பங்கு பேரம் நடத்தாமல் விடமாட்டார்கள். இதில் 'கோல்மால்' நடந்திருக்க வேண்டும் என்பதற்கு இந்தச்சிறு கணக்கு சான்று : ஒவ்வொரு வங்கி கவுண்டரிலும் தொடக்க நாளைக்கு சுமார் 2100 டிக்கெட்டுகள் விநியோகித்திருக்க வேண்டும். 1 நபருக்கு 1 நிமிடம் வீதம் (தலைக்கு 2 டிக்கெட் வரை வாங்கலாம்) என்ற கணக்கில் பார்த்தால் கூட 1,050 நிமிடம் (17.5 மணி) நேரம் ஆகியிருக்க வேண்டுமே! ஆனால் எல்லா டிக்கெட்டுகளும் 3 மணி நேரத்திற்குள் தீர்ந்து விட்டதன் மர்மம் என்ன?




FREE E BOOKS - www.thamizham.net - TM1872 / Dec 2010

# பேட்டி: எஸ்.ஐ.இ.டி. கல்லூரி முதல்வருடன்

எஸ். ஐ. இ. டி. கல்லூரி முதலாண்டு பட்டப்படிப்பு மூடப்பட்டு, ஆசிரியர்கள் தமிழகமெங்கும் போராட்டத்தில் குதித்திருக்கும் சூழலில், கல்லூரி முதல்வர் என்ன தான் நினைத்துக் கொண்டிருக்கிறார்— அவர்கள் நிலை தான் என்ன என்றறிய முதல்வர் திருமதி ராஜம் கிருஷ்ணனை சுட்டி சார்பில் சந்தித்துப் பேசி நிறைய கேள்விகள் கேட்கப்பட்டன. நிர்வாகத்தின் வாயாக விளங்கும் முதல்வரின், பேச்சின் முக்கிய பகுதிகளை மட்டும் தருகிறோம் :—

"தற்காலிகமாகத்தான் முதலாண்டு பட்ட வகுப்புகளை மூடியுள்ளோம். நிரந்தரமாக மூடும் நோக்கம் எங்களுக்கல்ல; ஆசிரியைகள், வீதிக்கு வந்து போராடுவதும், அவர்கள் சொல்கிற படியெல்லாம் ஆடுவதற்கு மாணவிகளைத் தயாரித்து விட்டிருப்பதும், எதற்கெடுத்தாலும் கேள்வி கேட்டு தங்கள் உரிமையைக் கேட்பதும், வகுப்புக்குப் போவதற்கு சட்டம் பேசுவதும்— ஆசிரியைகளா இவர்கள்? ஒழுக்கம் வேண்டாமா? எதற்கெடுத்தாலும் AUT ஐக் காட்டி மிரட்டுவதா ஆசிரியைகள் மனம் திருந்தி, தங்கள் போராட்ட உணர்வுகளை விட்டு விட்டு, ஒழுக்கமாக நடந்து கொள்கிறோம் என்று நடந்ததற்கு மனம் வருந்தி (மன்னிப்புக் கூட கேட்க வேண்டாம்) பழையபடி— அதாவது போராட்ட காலத்திற்கு முன்பு இருந்தது போல நடந்து கொள்ள முன் வருவார்களானால் மீண்டும் தடையின்றி முதலாண்டு வகுப்புகளைத் தொடங்குகிறோம்— பழைய படி நல்ல முறையில் முந்தய பெருமையுடன் கல்லூரி நடக்கும் முதலாண்டு வகுப்புகளை நிறுத்தி வைத்திருப்பதற்குக் காரணம், ஆசிரியைகளை அச்சுறுத்தித் திருத்தத் தானே தவிர தண்டிக்க அல்ல; ஒரு நாள் மீண்டும் திரும்புவார்கள் என நம்புகிறோம். அப்படி அவர்கள் மனம் மாறுவிட்டால் இப்படியே போராடிக் கொண்டு தான் இருப்போம் என்று உறுதியாக இருந்தால் வேறு என்ன செய்ய முடியும்? இப்படி ஒழுக்கம் இல்லாதவர்களை வைத்து கல்லூரி நடத்துவதை விட கல்லூரியே நடத்தாமல், மாணவர்களை கெடுக்காமலாவது இருந்து விடலாம். இந்நிலை தொடருமானால் என்ன தான் நடக்கும் என்று நான் சொல்வதற்கில்லை!"

## பாராட்டுகிறோம்!


திருமண அறிவிப்பு.

"நடைமுறையுடன் இணைக்கப்படாத தத்துவங்கள் ஜெயிப்பதில்லை" என்ற குறிப்புடன், சுட்டி வாசகர், ஆய்க்காரன் புலத்தைச் சார்ந்த திரு. வெ வரதராசன், சுட்டியன் முந்தைய கட்டுரையால் கவரப்பட்டு, (சுட்டி இதழ் :16) தனது திருமண விழாவை, குடும்ப விழாவாக 23—8—82 அன்று நடத்தியுள்ளார். "திருமண அறிவிப்பு" மட்டுமே வெளியிட்டுள்ளார். இவரது திருமண வாழ்வு சிறப்புறவும், துணிவான சீர்திருத்த உணர்வு மேலோங்கவும் சுட்டி பாராட்டுகிறது! முன்பு அறிவித்தபடி அவர் ஆயுள் முழுவதும் அவருக்கு சுட்டி அனுப்பப்படும்.

இந்த இளைஞரைப் பின்பிற்றி இன்னும் நிறைய முற்போக்குள்ள "திருமண அறிவிப்புகள்" தொடர வேண்டும் என சுட்டி விரும்புகிறது.

நிர்வாகத்தின் மேலாதிக்க சிந்தனையை அழகாக, ஒழுக்கம் என்ற போர்வை போட்டு ... சபாஷ்! உங்களைப் புரிகிறது!

வீதிக்கு வந்து ஆசிரியர்கள் போராடுவது ஒழுக்கமில்லையாமாம்! தெரியுமா உங்களுக்கு? பிரஞ்சு நாட்டின் சார்போன் பல்கலைக்கழக தத்துவப் பேராசிரியர் ழான் சார்த் நீதிக்காக வாதாடி அரசாங்கத்தையே எதிர்த்து மாணவர்களுடன் வீதிக்கு வந்து போராடினார். அந்த கல்லூரிப் பேராசிரியருக்கு நோபல் பரிசே வழங்கப்பட்ட போது, அவர் அதனை மறுத்தார். நியாயங்களுக்காக வீதிக்கு வருவது தான் உயர்ந்த ஒழுக்கம்! அடிவருடுவதும், அஞ்சி பணிவதும் கீழ்களின் ஆசாரம்!

எஸ். ஐ இ. டி கல்லூரியின் இறந்த கால அவலங்களை நாடறியும். ஆனால் அம்மையார் அந்த அடிமை நாட்களை கல்லூரியின் பொற்காலமாக நினைத்து, அக்காலத்திற்கு மீண்டும் ஆசிரியைகளை வரவழைக்க மிரட்டுகிறார்! சுரண்டப்பட்டும், அடிமைத்தனத்தில் ஆழ்த்தப்பட்டும் கிடந்த ஆசிரியைகள் நிரந்தரமாக விழித்து விட்டார்கள்! இவர்களின் நியாயமான உரிமைகளுக்காக, தமிழகம் முழுவதும் ஆசிரியர்கள் நடத்தி வரும் போராட்டம், தனியார் கல்லூரிகளில் நடந்து வரும் அராஜக போக்குகளுக்குக் கடைசி எச்சரிக்கையாகவும், பாடமாகவும் இருக்க வேண்டும்.

FREE E BOOKS - www.thamizham.net - TM1872 / Dec 2010

# நமது கொய்யா மருத்துவம்

☐ விலை மலிவான பழங்களிலும் நிறைய சத்தும், மருத்துவ குணங்களும் உண்டு என்பதற்கு இன்னொரு எடுத்துக்காட்டு கொய்யா. இது நமது நாட்டில் மிக அதிகமாகப் பயிராவதால் தான் இதன், விலை மலிவு.

☐ விதை நீக்கப்பட்ட கொய்யாப்பழம் இதயத்துக்கு வலிவூட்டும் சக்தியுடையது.

☐ மலச்சிக்கலை நீக்கும் மகத்தான பழம் கொய்யா.

☐ விக்கல் வந்தால், கொய்யா உண்ணுங்கள். விக்கல் உடனே நிற்கும்.

☐ இதில் வைட்டமின் 'சி' மிகுதி. இதைத்தவிர ஏ, பி, வைட்டமின்களும், சிறிதளவு உள்ளன. ஓர் அவுன்சு பழத்தில் .1 கிராம் புரதம், .1 கிராம் கொழுப்புச் சத்து, 3 மில்லி கிராம் சுண்ணாம்புச் சத்து, 4.1 கிராம் கார்போ ஹைட்ரேட், .3 கிராம் இரும்புச் சத்தும் உள்ளன.

☐ கொய்யாப் பிஞ்சுக்குப் பேதியை நிறுத்தும் குணம் உண்டு.

☐ கொய்யா இலையை கஷாயம் வைத்துப் பருகினால் வாந்தியும் பேதியும் நிற்கும். இந்த இலையை வாயிலிட்டு நன்குமென்று வாய் கொப்பளித்தால் பல்வலி குறையும். கடும் பல்வலிக்கு இப்படி அடிக்கடி செய்து பயன் பெறுக.

☐ கொய்யா இலைக்கொழுந்தை உண்டால் நல்ல பசி எடுக்கும். குடல் வலுப்பெறும். அஜீரணத் தொல்லைகளுக்கு இலைக் கொழுந்தைப் பறித்து கழுவிச் சுத்தம் செய்து காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டால் குணம் தெரியும்.

☐ கொய்யாப் பழத்தை சாப்பிடும்போது, தோல் நீக்கிச் சாப்பிடக்கூடாது. அப்படி சாப்பிட்டால் அஜீரணக் கோளாறுகள் தோன்றும். மேலும் தோலேடு சாப்பிட்டால்தான் அதிலுள்ள சத்துக்களை முழுமையாகப் பெறமுடியும்.

☐ கொய்யாவை அளவோடு உண்ணல் நலம். அதிகமாக உண்பது சிலர் உடலுக்கு ஒத்துக்கொள்வதில்லை.

☐ கொய்யா நமது நாட்டின் தொன்மையான மரமல்ல. ஸ்பானிஷ் மொழியில் "குவாயாலா" என்றும், ஆங்கிலேயர்களால் "குயாவா" என்றும் இது அழைக்கப்படும். உச்சரிப்பைக் காணும்போது இதுஒரு ஐரோப்பிய இறக்குமதி சரக்கே என்பது தெரிகிறது.

—சித்ரன்

# ருஷ்யாவில் பாரதி விழா

அந்நிய மண்ணில் நமது பாரதிக்கு விழா எடுக்கவிருப்பது பாரதிக்கும், தமிழுக்கும் கிடைக்கவிருக்கும் உண்மையான பெருமையாகும்.

வரும் டிசம்பரில் சோவியத் யூனியனில் பாரதிக்கு நூற்றாண்டு விழா எடுத்து சிறப்பிக்க, அங்குள்ள பல்வேறு சங்கங்களும், பல்கலைக்கழகங்களும் இணைந்து விழாக்கமிட்டி அமைத்துள்ளன.

நூற்றாண்டு விழாவை ஒட்டி பல கலாச்சார நிகழ்ச்சிகள் நடைபெறவிருக்கின்றன. நாடு முழுவதும் உள்ள பத்திரிகைகள் பாரதியாரைப் பற்றிய கட்டுரைகளையும், பாரதியார் பாடல்களின் மொழி பெயர்ப்புகளையும் வெளியிடுகின்றன.

தனது "புதிய ருஷ்யா" என்ற பாடலின் மூலம், 1917 அக்டோபர் புரட்சியை தெற்கு ஆசியாவிலேயே வரவேற்ற முதல் கவிஞர் நம் பாரதி தான்.

60 இன் பிற்பகுதியில் பாரதி இலக்கியங்கள் பற்றி, லெனின் கிராடு பல்கலைக் கழகத்தில், பிரபல இந்திய இயலாளர் செம்யோன் ருதின் தொடர் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். இக்காலக்கட்டத்தில் சோவியத்தில் கல்வி கற்ற சோஷலிச நாடுகளின் மாணவர்கள் பாரதியார் கவிதைகளைப் படிக்கவும், அவற்றைத் தங்கள் நாடுகளில் மொழி பெயர்க்கவும், ருதின் ஊக்குவித்தார்.



நூற்றாண்டு விழா கமிட்டி கூட்டமொன்றில் வைக்கப்பட்ட மேலே உள்ள பாரதி உருவப்படம் சோவியத் ஓவியர் மிகையீல் பியோதரோவா என்பவரால் திரைச்சீலையில் தீட்டப்பட்ட ஒரு தைல வண்ண ஓவியமாகும். பாரதியை ஓவியத்தில் உருவாக்கிய முதல் ஐரோப்பிய ஓவியர் இவர்தான். இந்த உருவப்படத்தின் பின்புறம் பாரதியின் புதிய ருஷ்யாவிலிருந்து 2 அடிகள் எழுதப்பட்டுள்ளன.

"மாகாளி பராசக்தி உருசிய நாட்டினில் கடைக்கண் வைத்தாள்..."

FREE E BOOKS - www.thamizham.net - TM1872 / Dec 2010

# நாட்டு நடப்பு

**உத்தரப்பிரதேசம்:** மீரட் எம். எல். ஏ சேதி தனது அமைச்சர் நாற்காலியை இழந்ததற்குக் காரணம், நாற்காலி விஷயத்தில் செய்த ஒரு சிறு தவறே. காங்கிரஸ் ஊழியர் கூட்ட மேடையில் 4 க்குப் பதிலாக 3 நாற்காலிகளே ஏற்பாடு செய்திருந்தாராம். அதில் முறையே முதலமைச்சர் வி. பி. சிங், ராஜீவ் காந்தி, ஏ ஐ சி சி பொதுச் செயலர் படீல் ஆகியோர் அமர கூட வந்த அருண் நேருவிற்கு நாற்காலி இல்லை; கோபமடைந்து நேரு கூட்டத்துடன் உட்கார்ந்தார். பின், முதலமைச்சரைத் தூண்டி சேதிக்குச் சீட்டுக் கிழிக்க வைத்தாராம்.

**வடகிழக்கு மாநிலங்கள்:** திரிப்புரா, மிசோரம் போன்ற வடகிழக்கு மாநிலங்களில் நாட்டின் பிற பகுதிகளை விட சுமார் 40% எல்லா விலைவாசிகளும் அதிகமாக உள்ளன. பிற மாநிலங்களையே பெரிதும் இவை நம்பியிருப்பதே காரணம் அஸ்ஸாம் கிளர்ச்சியின் போது உப்பு கிலோ ரூ 9 க்கு விற்றிருக்கிறது. மணிப்பூர் நாகாலாந்து ஆகிய சிறு மாநிலங்களில் நாட்டிலேயே மோசமான லஞ்ச லாவண்யங்கள் தலைவிரித்தாடுகின்றன. அருணாசல பிரதேஷின் பெரும் பகுதியினர் ஐ ஏ எப் விமானங்கள் உணவு பண்டங்களை மேலேயிருந்து வீசியெறிவதையே நம்பியிருக்கிறார்கள். சிறு மருத்துவப் பிரச்சனைக்குக் கூட கல்கத்தா செல்ல வேண்டிய நிலை.

**ஹரியானா:** சண்டிகார் அருகில் உள்ள பதேரி கிராமத்தில் டாக்டர் டி. டி. சர்மா, கொத்து கொத்தாக தபால்களை ஒரு குட்டையின் பக்கத்தில் கண்டெடுத்திருக்கிறார். அந்தக் கட்டில், மாணவர்களுக்குரிய பஞ்சாப் மெட்ரிகுலேஷன் மதிப்பெண் தாள்கள் வேறு நிறைய கிடைத்திருக்கின்றன. உரியவரிடம் சேர்ப்பிக்கப்படாமல் பரிதாபமாக கிடந்த இந்த முக்கிய கடிதங்களை ஒரு எருமை மாடு, சுவைக்க முயன்ற போது தான் இதைக் கவனித்து மீட்டிருக்கிறார்.

**சுட்டி விற்பனையாளர்கள் தேவை:—** சுட்டி விற்பனையாகாத எல்லா ஊர்களிலும் தேவை. சுட்டியின் வளர்ச்சியிலும் கொள்கையிலும் ஆர்வம் இருந்தால் நல்லது.

# கோழி முட்டையிலும் கலப்படமா?

உளுத்தம் பருப்பிலிருந்து ஊறுகாய் வரைக்கும், தொட்ட தொண்ணூற்றிலும் கலப்படம் செய்கிறார்கள் என்று, சத்தான உணவு உண்ண, கலப்படமே செய்யமுடியாத நாட்டுக் கோழி முட்டை வாங்கினால், அதிலும் தொழிலைக் காட்டுகிறார்களே!

மற்ற லெகான் முட்டைகளுடன் இணைத்து வைக்கப்பட்டுள்ள நாட்டுக் கோழி முட்டைகள் பளிச்சென்று பழுப்பு நிறத்தில் மின்னுகின்றன. ஆனால் அவையும் சாதாரண லெகான் முட்டைகள் தான்.

இந்த சாதா முட்டைகளை, செம்மண் கலந்த தொட்டிகளில் போட்டு 24 மணி நேரம் கழிந்தபின் காயவைத்து விற்பனைக்குக் கொண்டு போகிறார்களாம். சில அவசர வியாபாரிகள், டீ போட்ட பின்னர் உள்ள சக்கைகளை ஒன்று சேர்த்து தண்ணீர் கலந்து அந்த பழுப்பு நீரில் முட்டைகளைக் குளிப்பாட்டி தற்காலிக சாயம் ஏற்றி மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

வெந்நீரில் இந்த முட்டைகளைப் போட்டால், அவை சாயம் வெளுத்துப் போய், உண்மையைப் புரிய வைக்கும். இம்மாதிரி சாயம் ஏற்றப்பட்டவை, (சாயம் உள்ளே சில சமயங்களில் கசிந்து) உடலுக்கு பெருந்தீங்கு விளைவிக்கக் கூடும்.

இனி இந்த மாதிரி பழுப்பு நிற நாட்டுக்கோழி முட்டைகளை வாங்காமல் தவிர்ப்பது கூட பாதுகாப்பானது தான். அதிக சத்து இருப்பதாக நினைத்து வம்பை விலைக்கு வாங்குவதைவிட, சாதா வெள்ளை முட்டைகளைக் குடிப்பதே மேல்.

கடையில் இந்த சாய முட்டைகளை விற்பனை செய்பவர்களைக் கேட்டால், இவைகளை மொத்தமாக சப்ளை செய்பவர்களிடமிருந்து வாங்குவதாக கூறுகிறார்கள்.

சுகாதார அதிகாரிகளுக்கு இந்த உண்மை தெரியுமா? தெரிந்தும் தெரியாமல் 'சம்திங்' வாங்கிக் கொண்டு ஒதுங்குகிறார்களா? கலப்படக்காரர்களுக்கு மட்டுமல்ல, மக்களது உயிரைக் குடிக்கும் உணவுக் கலப்படத்தை தண்டிக்காமல் விட்டுக் காசு சம்பாதித்துக் கொண்டிருப்பவர்களையும் கடுமையாகத் தண்டித்தாக வேண்டும்.

—கா. இராமச்சந்திரன்

FREE E BOOKS - www.thamizham.net - TM1872 / Dec 2010

# அவன் ஓர் இந்தியன்





சிறு கதை

"அநியாயம் ரொம்ப அதிகமாகிப் போச்சுடா!" என்று எரிந்து விழுந்தான ஏகப்பன்.

"அப்படி என்ன நடந்தது?" என்று நான் கேட்டேன். அவ்வளவு தான். நெருப்புத் துண்டுகளைச் சில கெட்ட வார்த்தைகளோடு தாளித்துக் கொட்டினான். (அதை சென்சார் செய்து கீழே தருகிறேன்)

"எம் புள்ளைக்கி என்ன வயசுன்னு, என்னைவிட மத்த எந்தக்... க்குத் தெரியும்? என்ன பள்ளிக்கூடம் நடத்துறாங்க? அஞ்சு வயசு முடிஞ்சு ஆறுவது நடக்குதுங்குறேன். அந்த...... பய, ஒண்ணாங் கிளாசில சேத்துக்க மாட்டானாம். ஆறு வயசுன்னு நம்ப மாட்டேங்குறான். இந்தப்பய காச்சல்லேயும் கழிச்சலேயும் கிடந்து எலும்பெலும்பா இருக்கான். பாத்தா மூணு வயசு மாதிரித்தான் தெரியும். ஆனா....பெத்த அப்பன் சொல்றேன் ஆறு வயசுன்னு. சர்டிபிகேட் கொண்டாங்குறான்! இனிமே நான் இவன் பொறந்த ஆஸ்பத்திரிக்குப் போயி லஞ்சம் கொடுத்து அந்தச் சர்டிபிகேட்டை வாங்கியாரணுமாம்! என்ன அநியாயம் பாரு. சத்தியத்துக்கே மதிப்பிலே! உள்ள வயசைச் சொன்னா....ஒத்துக்க மாட்டேங்குறான்....ம்... காலம் கெட்டுக் கெடக்கு! என்று பெருமூச்சு விட்டான்.

நான் தெரியாத்தனமாக மாட்டிக்கொண்டு விழி பிதுங்கும் நேரத்தில்-நல்ல வேளையாகக் கண்டக்டர் வந்து சேர்ந்தார்.



டிக்கட் கொடுத்துக்கொண்டே வந்தார்.

நான் மதுரைக்கு ஒரு டிக்கட் வாங்கிக் கொண்டேன்.

எதிர்ப்பக்கம் ஒரு வெளிநாட்டுக்காரர், தன் மனைவி, ஒரு அழகிய பையனுடன் உட்கார்ந்திருந்தவர் மூன்று டிக்கட் கேட்டார்.

பையன் சின்னப் பையன். எனவே கண்டக்டர் அந்தப் பையனுக்கு அரை டிக்கட் வாங்கினால் போதும் என்று சொல்லிப் பார்த்தார்.

ஆனால் அந்த வெளிநாட்டுக்காரர் பிடிவாதமாக "நோ நோ அவனுக்குப் பன்னெண்டு வருஷம் மூணு மாசம் ஆகுது. அதுனால முழு டிக்கட்தான் வாங்கோணும். குழந்தை வயசைக் குறைச்சுச் சொல்லலாமோ! குழந்தையை மதிக்கணும். உள்ளதைச சொல்லணும்!" என்று சொல்லி மூன்று டிக்கட்டுகளை வாங்கிக் கொண்டார்.





பஸ்ஸிலிருந்த அனைவருக்கும் வியப்பு. இப்படியும் சில மனிதர்களா என்று மூக்கில் விரலை வைத்தோம். நாமும் இப்படி மாறவேண்டும் என்ற வைராக்கியம் ஏற்பட்டது.

கண்டக்டர் ஏகப்பனிடம் வந்து நின்றார்.

ஏகப்பன் பையனைத் தூக்கி மடிமேல் வைத்துக்கொண்டு கேட்டான், "கண்டக்டர்! காரைக்குடிக்கு ஒரு டிக்கட்!"

அவன் ஓர் இந்தியன் என்பதை நிரூபித்துவிட்டான்!

வ. நேனப்பன்

---



☐ சுவிட்சாலந்து நாட்டு விஞ்ஞானியான ஜீன் ஜேக்குவஸ் பேபல் என்பவர், ஒரு கம்ப்யூட்டரைப் பயன்படுத்தி, சென்ற 6000 ஆண்டுகளில மட்டுமே உலகில் 14,513 போர்கள் நடைபெற்றிருப்பதாகவும், அவற்றில் மொத்தம் 364 கோடிப் பேர்கள் கொல்லப்பட்டிருப்பதாகவும் கண்டுபிடித்திருக்கிறார். அதாவது, நாமனைவரும், தற்போது நமது தொன்மைக் கால அல்லது அன்மைக் கால மூதாதையர்கள், முன்னோர்களது கல்லறைகளின் மீதுதான் நடமாடிக் கொண்டிருக்கிறோம்.

☐ பாராளுமன்றத்திற்கு ராஜீவ்காந்தி தேர்ந்தெடுக்கப்பட்ட பின், பாராளுமன்ற மத்திய அறையில் தனது ஆதரவாளர்களுடன் நுழைந்தார். எப்போதும் ராஜீவ் பின்னால் உட்காருவதை பெருமையாக நினைக்கும் ஒரு உறுப்பினர், ஆளுங்கட்சி உறுப்பினர்களை அவருக்கு அறிமுகப்படுத்தி விட்டு, கடைசியாக ராஜீவ் காலைத்தொட்டுக்கும்பிட்டாராம் இதே மாதிரி தாங்களும் செய்ய வேண்டியிருக்குமோ என பயந்து போய் பல உறுப்பினர்கள் பக்கத்து கதவுகள் வழியாக நழுவத் தொடங்கி விட்டார்களாம்,



FREE E BOOKS - www.thamizham.net - TM1872 / Dec 2010



# ஆட்டோ ரிக்ஷா பிரச்சனை

சென்னையில், ஆட்டோவில் பயணிகள் எதிர்கொள்ளும் வார்த்தைகள் 'மீட்டருக்கு மேலே ஏதாவது பார்த்து கொடுங்க சார்' என்ற கெஞ்சல் அல்லது 'மீட்டருக்கு மேல் இவ்வளவு தருகிறீர்களா' என்ற கண்டிஷன்!

நாளுக்கு நாள் பயணிகள் ஆட்டோக்காரர்கள் மேல் எரிச்சலடைகிறார்கள். சுயமரியாதை இல்லாமல் இவர்கள் இப்படிக் கேட்கிறார்களே. சரி இவர்கள் நிலையிலிருந்தும் பிரச்சனையை பார்த்தால் என்னவென்று முயன்றபோது சில உண்மைகள் தெரியவந்தன.

ஏறக்குறைய எண்பது சதவீத ஆட்டோக்கள் அதை ஓட்டுபவர்களுக்குச் சொந்தம் கிடையாது! எனவே ஆட்டோ டிரைவர்கள், ஆட்டோவின் சொந்தக்காரர்களுக்கு ஒரு நாளைக்கு அதாவது பன்னிரெண்டு மணிக்கு ரூ 25/-என்ற வீதத்தில் வாடகை செலுத்த வேண்டும்! அதோடு சிறிய ரிப்பேர்களையும், பெட்ரோல் செலவையும் ஆட்டோ டிரைவர்களே பார்த்துக் கொள்ள வேண்டும். ஒரு ஆட்டோ டிரைவர் ஒரு நாளைக்கு 100 கி. மீ ஓட்டுகிறார் என்று வைத்துக் கொண்டாலும், இதில் ஏறக்குறைய இருபது சதவீத தூரம் சவாரி இல்லாமல் அதாவது சவாரியைத் தேடிக்கொண்டு வெறுமனே போக வேண்டியதாய் இருக்கிறது. இந்த 100 கி. மீ. ஓட்ட இவர்களுக்கு சுமார் 5 லிட்டர் பெட்ரோல் செலவாகிறது. இதன் விலை மட்டும் சுமார் 35 ரூபாய்! இதுவல்லாமல், ஆட்டோ டிரைவர்களுக்கு வீடு என்ற ஒன்று இருந்தாலும் இவர்கள் அங்கு சென்று சாப்பிட முடிவதில்லை. எனவே பெரும்பாலும் இவர்கள் ஓட்டல் சாப்பாட்டையே நம்ப வேண்டியதாயிருக்கிறது. இதற்கு ஒரு நாளைக்கு குறைந்தது பத்துரூபாயாவது செலவாகிறது! இப்படி வாடகைக்காக இருபத்தைந்தும், பெட்ரோலுக்காக முப்பத்தைந்தும் சாப்பாடு, டீ, பீடி செலவுக்காக பத்தும் ஆக ஒரு நாளைக்கு ரூ 70/-சம்பாதித்தே ஆகவேண்டும். ஆனால் 80 கி.மீ ஓட்டினால், கிலோ மீட்டருக்கு 90 காசு வீதம் இவர்களுக்குக் கிடைக்கும் மொத்த வருமானம் 72 ரூபாய் மட்டுமே! இப்படி 72 ரூபாய் சம்பாதிக்க, 70 ரூபாய் செலவு செய்தால் அவர்களின் வயிறு என்ன மண்ணையா தின்னும்?

**பணவிடை (M.O) அனுப்பும் வாசகர்கள்** சிலர் கிழிக்கப்பட வேண்டிய கீழ்பகுதியில் தங்கள் முகவரியே எழுதாமல் அனுப்பி விடுகிறார்கள் யார் பணவிடை அனுப்பினார்கள் என்பது கண்டு பிடிக்க முடியாமல் பிரச்சனையாகிறது. தயவு செய்து, தவறாமல் உங்கள் முகவரி கிழிக்கும் பகுதியில் எழுதப்பட்டிருக்கிறதா என்று சரி பார்த்து அனுப்புங்கள்.

ஒருவேளை அவர்கள் தங்கள் சாப்பாடு, டீ, பீடி செலவை ஐந்து ரூபாயாகக் குறைத்துக் கொண்டு, சவாரி இல்லாமல் ஓட்டும் தொலைவை 10 கி. மீட்டராகக் குறைத்துக் கொண்டாலும், 100 கி. மீ. ஓடுகின்ற நாட்களிலும் இவர்களுக்குக் கிடைக்கக்கூடிய தினவருமானம் ரூ. பதினாறு மட்டுமே! ஆனால் எத்தனை நாட்களுக்கு இவர்களுக்கு 100 கி. மீ சவாரி கிடைக்கிறது? பல ஆட்டோ டிரைவர்களை விசாரித்து பார்த்ததில், சென்னையில் நல்ல பஸ் வசதி இருப்பதால் மாதத்தில் சுமார் 10 நாட்களுக்கு மட்டுமே 100 கி. மீ சவாரி கிடைக்கிறது என்று சொல்லுகிறார்கள். மீதி நாட்களில் 50 கி. மீ. முதல் 90 கி. மீ வரை சவாரி கிடைக்குமாம் சாப்பாடு, டீ, பீடி செலவை 5 ரூ என்றும், சவாரி இல்லாமல் போகும் தொலைவை 10 சதவீதம் என்றும் கொண்டு, ஒரு ஆட்டோ டிரைவர் எவ்வளவு ஓட்டினால் எவ்வளவு சம்பாதிக்கிறார் என்று கீழே ஒரு அட்டவணையைக் கொடுத்திருக்கிறேன்.

| ஓட்டும் தொலைவு | சம்பாதிக்கும் மொத்தபணம் | ஆட்டோ வாடகை | பெட்ரோல் செலவு | சொந்த செலவு | இலாபம் |
|---|---|---|---|---|---|
| 50 கி. மீ | ரூ 41 | ரூ 25 | ரூ 17 | ரூ 5 | ரூ -6 |
| 60 கி. மீ | ரூ 51 | ரூ 25 | ரூ 20 | ரூ 5 | ரூ 1 |
| 70 கி. மீ | ரூ 57 | ரூ 25 | ரூ 25 | ரூ 5 | ரூ 2 |
| 80 கி. மீ | ரூ 65 | ரூ 25 | ரூ 28 | ரூ 5 | ரூ 7 |
| 90 கி. மீ | ரூ 73 | ரூ 25 | ரூ 32 | ரூ 5 | ரூ 11 |
| 100 கி. மீ | ரூ 81 | ரூ 25 | ரூ 35 | ரூ 5 | ரூ 16 |

இதைப் பார்க்கும்போது சிக்கனமாக உள்ள ஒரு ஆட்டோ டிரைவர் கூடக்குறைந்தது 100 கி. மீ. ஓட்டினால்தான் அவருக்கு பதினாறு ரூபாயாவது கிடைக்கும் என்று தெரிகிறது! இப்படி மாதத்தில் 10 நாட்கள் 100 கி. மீட்டரும், 16 நாட்கள் 90 கி. மீட்டரும், மீதி நான்கு நாட்கள் ஓய்வும் எடுத்துக் கொள்ளும் ஒரு

FREE E BOOKS - www.thamizham.net - TM1872 / Dec 2010

சராசரி ஆட்டோ டிரைவருக்கு கிடைக்கும் மாத வருவாய் (10X16) (16X11) 160 176 ரு 336 மாத வருவாய் 336-ஐ வைத்துக்கொண்டு சென்னையில் வீட்டு வாடகை கொடுத்துக் கொண்டு, மனைவி மக்களோடு எவராவது வாழ முடியுமா? எனவே ஆட்டோ டிரைவர் மீட்டருக்கு மேல் ஏதாவது கேட்காமல் ஆட்டோ ஓட்டினால் சென்னையில் அவர் பிழைக்க முடியுமா? தாங்கள் செய்ய வேண்டிய வேலையை செய்வதற்குக் கூட இலஞ்சம் வாங்கும் அரசாங்க ஊழியர்களும், பெறுகின்ற பணத்தில் பாதி கறுப்பும்பாதி வெள்ளையுமாக மட்டுமே வாங்குகின்ற வியாபாரிகளும் இருக்கின்ற நெருப்புப் பிழம்புகள் இடையே, ஆட்டோ டிரைவர்களால் மட்டும் எப்படி எரியாத கற்பூரமாக இருக்க முடியும்?

அப்படியென்ருல் இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு தான் என்ன?

'ஓட்டுபவருக்கே ஆட்டோ சொந்தம்' என்ற நிலை கொண்டு வருவதே இப்பிரச்சனையை நிரந்தரமாகத் தீர்க்கும்.

—சீதா. செந்தாமரைக்கண்ணன்


புது அச்சகம் தொடங்குவோரும், புது அச்சு எழுத்துக்கள் வேண்டுவோரும் சிறந்ததை மலிவாகப் பெற மறவாமல் தொடர்பு கொள்க:-

தொலைபேசி: 37999, 30857

ரங்கா டைப் பௌண்ட்ரி

☐ போஸ்டர் அச்செழுத்துக்கள் எங்கள் சிறப்புத் தயாரிப்பு
☐ எல்லாவித அச்சு எழுத்துக்கள், அச்சக உபகரணங்கள்.

அலுவலகம்:- 73, ஹண்டர்ஸ் சாலை, வேப்பேரி, சென்னை-600112

தொழிற்சாலை:- 38, குட்டி செட்டி தெரு, பெருமாள் பேட்டை, சென்னை-600007



## சிசு ஊன மருந்துகள்

கருவுற்ற நிலையைப் பரிசோதித்தறிய பயன்படுவதாகக் கூறும் சில மருந்து வகைகள் மிக ஆபத்து விளைவிக்கின்றன. இதைப் பயன்படுத்தினுல் ஊனமுற்ற குழந்தைகள் பிறக்க நேரிடுகிறதென்று 1973 இல் அமெரிக்காவிலும், 1974 இல் ஆஸ்திரேலியாவிலும் இம்மருந்து தடை செய்யப்பட்டது. உலக சுகாதாரக்கழகம் தன் உறுப்பு நாடான இந்தியாவை இதுபற்றி எச்சரித்தும் கூட, கடந்த 9 ஆண்டுகளாக இங்கு இதுதடையின்றி விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

பெண்ணுரிமை சங்கங்களின் தொடர்ந்த கூப்பாடுகள் காரணமாக, நம் அரசாங்கம் கொஞ்சம் அசைந்து கொடுத்து இம்மருந்துகளைத் தடை செய்ய உத்தர விட்டுள்ளது. ஆனுல் அதிலும் ஒரு வழுக்கல். இவ்வளவு அபாயமான இம்மருந்துகளை மின்னல் வேகத்தில் நீக்குவதை விட்டு விட்டு, இவ்வாண்டு டிசம்பர் வரை இம்மருந்துகளைத் தயாரித்துக் கொள்ளவும், ஜூன் 1983 வரை விற்பனை செய்து கொள்ளவும் அரசு அனுமதித்துள்ளது.

யூனிசெம், கிளாக்சோ, போன்ற பல பிரபல பன்னுட்டு நிறுவனங்கள் இம்மருந்துகளை இந்தியாவில் தயாரிக்கின்றன

அரசு இவர்களை அனுமதிக்கும் இக்காலக்கட்டத்தில், பிறக்கப்போகும் $2\frac{1}{4}$ கோடி இந்தியக் குழந்தைகளில், ஒரு குறிப்பிட்ட சதவீதத்தினர் பலவித ஊனத்துடன் பிறக்கும் அபாயம் திறந்து விடப்பட்டுள்ளது.





கோடிக்கணக்கான இளந்தளிர்களைக் காப்பாற்றுவதை விட, சில கோடீஸ்வர கம்பெனிகளைக் காப்பாற்ற முன் வந்துள்ள நம் இந்திய சுகாதாரத் துறை அமைச்சர்களும், அதிகாரிகளும் என்ன பதில் சொல்கிருர்கள்.

"மாத விலக்கை நிறுத்தவும் இம்மருந்து உபயோகமாகிறது. எனவே உடனே நீக்கவில்லை" என்று அரசு தரப்பில் அதிகாரி நொண்டிச்சாக்கு சொல்கிருர். ஆனுல் இதற்குவேறு மருந்துகளும் உள்ளன என்பதே உண்மை.—இ. ஜே. சுந்தர்

FREE E BOOKS - www.thamizham.net - TM1872 / Dec 2010

# தொலைபேசி தொல்லைகள்



உலகத்தின் மிகவும் பிற்போக்கான இந்திய தொலைபேசித்துறை யாரும் எள்ளி நகையாடும் அளவிற்குக் கேவலப்பட்டுக் கொண்டிருக்கிறது. இப்படிக் கூட தவறுகள் நிகழ முடியுமா என்று மலைக்க வைக்கும் புதுப்புது தவறுகளையும், சங்கடங்களையும் நாடு முழுவதும் தொலைபேசியைப் பயன்படுத்துவோர் அனுபவித்து வருகின்றனர்,

அவசர மருத்துவ உதவியோ, தீயணைப்போ, போலீசோ கூட சுழற்றினால் கிடைக்காமையால், பல சமயங்களில் ஏராளமான உயிர் பொருட் சேதங்கள் ஏற்படுவதற்கு தொலைபேசித்துறையே முழுப்பொறுப்பாகும். தப்புக் கட்டணம் வசூலித்தல், சம்மந்தமில்லா எண்கள் கிடைத்தல் (180 அடித்தால் 101 'தீயணைப்பு' என்கிறார்கள்), குறுக்குப் பேச்சு, பாதி தொலை பேசிகள் கூட இயங்க மறுத்தல், போன்ற பிரச்சனைகளால் பாதிக்கப்பட்டு செய்தித் தொடர்பு அமைச்சர் சி. எம் ஸ்டீபன் அவர்களிடம் முறையீடுகள் வந்த போது, எரிகிற நெருப்பில் எண்ணெய் விடுவது போல, "இப்படித்தானிருக்கும். தொலைபேசி வைத்திருப்பவர்கள் அதிருப்தி அடைந்தால் தொலைபேசியைத் திருப்பித் தந்து விடுங்கள். வேறொன்றும் செய்வதற்கில்லை" என்று பொறுப்பற்ற பதில் தருகிறார்.

நடுத்தர வர்க்க வெள்ளைக்காலர்களின் மந்தத்தனமும், மேனுமினுக்கித்தனமுமே, நிர்வாக ஊழல்களைத் தட்டிக்கேட்க ஆளில்லாத நிலைமையை ஏற்படுத்தி வருகிறது. தனி மனிதர்கள் கூடத் தட்டிக்கேட்க சட்டம் நிறைய இடம் தந்துள்ளது.

விஷம்போல ஏறிவிட்ட தொலைபேசிக் கட்டணத்தை மார்வாடியைவிடக் கறாராக வசூலிக்கவோ, அல்லது இணைப்பைத் துண்டிக்கவோ சுறுசுறுப்பாக இயங்கும் இத்துறை, ஓராண்டு தொலைபேசி இயங்காமல் போனால் கூட கவலைப்படாமலிருப்பது மட்டுமன்றி, வேலை செய்யாத நாட்களுக்கு சல்லிக்காசு கூடக் குறைக்காமல் வாடகை வசூலிக்கிறது! இந்திய டெலிகிராப் சட்டம் 412 "இலாக்காவால் அளிக்கப்பட்ட சாதனங்களைச் சரியான முறையில் பேணிக்காக்க வேண்டியது இலாகாவின் கடமையாகும்" என்று தெளிவுபடுத்துகிறது. விரைவில் தொலைபேசியை இலாக்கா சீராக்கவில்லையெனில், நஷ்டஈடு கோரி வட்டப் பொறியாளரிடமிருந்தும், துறையிடமிருந்தும் வசூலிக்க நமக்கு உரிமையுண்டு.

சில சமயம், பணம் சரியாகக் கட்டியும், தவறாக, தொலைபேசியை வெட்டப்போவதாக அச்சுறுத்துகிறார்கள். பணம் கட்ட கொஞ்சம் தாமதமானாலும் மாலையே இணைப்பைத் துண்டிப்போம் என போனில் பயமுறுத்துகிறார்கள்.

இந்திய டெலிகிராப் சட்டம் 421-படி 7 நாட்கள் தவணை எழுத்தில் கொடுத்த பின்னரே (இதனைப் பதிவுத் தபாலில் அனுப்பக்கோரும் உரிமையும் நமக்குண்டு) இணைப்பை நீக்க முடியும். இதற்கு முன் வெறும் வாய் வார்த்தையால் மிரட்டினாலோ, இணைப்பை வெட்டினாலோ, நஷ்டஈடு கோர முடியும்; நாம் துணிந்து முன் வரவேண்டும்! வழக்கு மன்றம் செல்வதாக மிரட்டினால், தெரு நாயாகத் திரும்பி ஓடும் இத்துறையைக் கண்டு விவரம் தெரியாத பொதுமக்கள் அநாவசியமாக அஞ்ச வேண்டியதில்லை.

—ஸ்டெனிஸ்லாஸ்


முனைவன் ஒரு முன்னோடித் தமிழாய்விதழ் சமூக விஞ்ஞானக் காலாண்டிதழ் ஆண்டுச்சந்தா ரூ 6; ஈராண்டுச்சந்தா : ரூ 10

30—6—82 — 9ஆமிதழ்-பக்கம் : 86—விலை : 3.00

முகப்போவியம் : இதுவரை காணாத கோலத்தில் ஒரு தலைவர்

தலையங்கம் : திராவிட இயக்கச் சிந்தனைக்கு

தமிழாக்கம் : மார்க்சிய இலக்கியக் கொள்கை

முனைவன்

பயண அனுபவம் : தொலைவுகள் நெருங்கும் தூரதரிசனம்

கே. டானியலின் : 'தற்காலத் தமிழலக்கியத்தில் வறுமையும் சாதியும்'

Isms in a nutshell : Structuralism மற்றும் பார்வைகள்—இதழிய உறவு—புதிய வரவு—காள்மலர்—ரசமட்டம்

"சிலிக்குயிலுக்கு ஓர் செங்கவிதாஞ்சலி" விலை : 3.00

பாப்லோ நெருடா பற்றி : தணிகைச்செல்வன் — இன்குலாப்—மீரா, மு. மேத்தா — தமிழ் நாடன் — தர்மூ அரூப்சிவராம் — கா. கா. வைகறைவாணன்—அறந்தை நாராயணன்—வே. மு. பொ

நெருடா படைப்புக்கள் : (தமிழாக்கம்) : தணிகைச் செல்வன் யமுனா புத்திரன் — சௌ மதார்மைதீன் — ஆண்டாள் வெற்பன் — வெ. மு. பொ 'சுதந்திரப்பறவைகள்'—'நீண்ட பயணம்'

தொடர்பு முகவரி : வே. மு. பொதிய வெற்பன்—20 கோதண்ட பாணித்தெரு—குடந்தை—612 001

(விளம்பரம்)


FREE E BOOKS - www.thamizham.net - TM1872 / Dec 2010

# முதலமைச்சர்களா இவர்கள்?

இந்தியாவின் 7 மாநிலங்களில் ஆட்சியிலிருக்கும் காங்கிரஸ் முதலமைச்சர்களின் பச்சை ஊழல்களும், லஞ்ச லாவண்யங்களும் பற்றி அந்தந்த மாநில காங்கிரஸ் காரர்களே வெளிப்படையாக காங்கிரசுக்கு அனுப்பிய அறிக்கை நம்மை திடுக்கிட வைக்கிறது. "ப்ரோப் இந்தியா" இதழ் வெளியிட்ட இந்த ஊழல் தொகுப்பிலிருந்து சில துளிகள்:—

**பீகார்: ஜெகன்னாத் மிஸ்ரா:—** அதிகாரத்துக்கு வந்தவுடன் மிஸ்ரா எரிசாராயத்தின் விலை லிட்டருக்கு 75 காசிலிருந்து ரூ 1-80 க்கு விலையேற்ற அனுமதித்தார். இதற்காக இவர் பெற்ற லஞ்சம் ரூ 1 கோடி. அரசு இழந்தது ரூ 7.32 கோடி. இவரும் இவரது அமைச்சர்களும் ரூ 5,000 லிருந்து 1 லட்சம் வரை, பொறியியலாளர்களின் பதவி நிர்ணயத்திற்குப் பணம் வாங்கியிருக்கிறார்கள். சம்பள விகிதத்தை, உயர்த்த மிஸ்ரா 15,000 பொறியியலாளர்களிடம் கூட்டாகத் தொகை வாங்கியிருக்கிறார்.

**கர்நாடகா: குண்டுராவ்:—** பதவி ஏற்றவுடன் குண்டுராவ் ரூ 7 லட்சம் மதிப்புள்ள மெர்சிடிஸ் காருக்கும், வீட்டோடு இணைத்த அலுவலகத்திற்கு ரூ 12 லட்சமும், உள் அலங்காரங்களுக்கு ரூ 6 லட்சமும் செலவிட்டிருக்கிறார். இவர் கலந்து கொண்ட 126 வரவேற்புகளில் ரூ 2 கோடி இவருக்கு வசூல் செய்து தந்திருக்கிறார்கள்.

**ஒரிஸா: ஜே. பி. பட்நாயிக்:** சமீபத்திய புயல் சேதத்தின் போது பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்க தரமான அரிசி விலையில் மட்ட அரிசி விற்கப்பட்டிருக்கிறது. அரிசி வியாபாரிகளுடன் பட்நாயிக் கூட்டாளியாகியிருக்கிறார். நண்பரும் அமைச்சருமான பிஸ்வால் சமீபத்திய வெளிநாட்டுப் பயணத்தின்போது, திட்டமிடப்படாது சுவிட்சர்லாந்து சென்றது பட்நாயிக்கின் பணத்தை ஸ்விஸ் வங்கியில் போடத்தான்.

**மத்தியப் பிரதேசம்: அர்ஜுன் சிங்:** தனது சாதிக்காரர்களான தக்கூர் இனத்தவரையே அர்ஜுன்சிங் 35 கார்ப்பரேஷன்களின் தலைமையில் அமர்த்தியுள்ளார். அனுகூலமான திட்டப் பகுதிக்கு பொறியாளர்களை மாறுதல் செய்ய வசூலிக்கப்படும் 'ரேட்': — சூப்ரெடென்டிங் இன்ஜினியர்: ரூ70,000; எக்சிகியூடிவ் இன்ஜினியர்: ரூ 50,000; மாவட்ட கார்ட்டிலாக்கா அதிகாரி: ரூ. 40,000; துணைப்பிரிவு அலுவர் ரூ. 30,000; பொறியாளர் ரூ. 10,000. தனது உறவினரை, போலீஸ் டி. ஐ. ஜி யிலிருந்து ஐ. ஜி ஆக்க, அவருக்கு மேல் இருந்த 19 பேர்களையும் பதவி உயர்த்தியிருக்கிறார். விளைவு: ம.பிரதேசத்தில் இப்போது ஒரு ஐ. ஜிக்குப் பதில் 20 பேர்கள் இருக்கிறார்கள்.

**ராஜஸ்தான்: சிவ் சரண் மாத்தூர்:** ராஜஸ்தான் கால்வாய்த் திட்டம் இதுவரை ரூ 250 கோடி விழுங்கியுள்ளது. இரண்டாவது கட்ட வேலை முடியும் போது ரூ 500 கோடி செலவாகியிருக்கும். இந்த திட்டத்தினை முக்கிய நிலையில் கண்காணித்து வருபவர் முதலமைச்சரின் சகோதரர். மாத்தூர் உறவினர்கள் இத்திட்டத்தினால் பெரும் பயன் அடைந்துள்ளனர். சென்ற ஆண்டு ஏற்பட்ட வெள்ள நிவாரணத்திற்குச் சேகரிக்கப்பட்ட ரூ 25 கோடியில் ரூ 10 கோடி தான் செலவிடப் பட்டிருக்கிறது. ஆதி வாசி மாணவர் விடுதி கட்ட நிலத்தை விற்றவர் முதலமைச்சர் மகள். அவரே அவ்விடுதியின் ஆட்சிக்குழு உறுப்பினர்.

**குஜராத்: மாதவ் சிங் சோலங்கி:**

ஆல்கலி திட்டத்திற்கு, ஒரு மார்வாரி வணிகக் குழுவிற்கு அனுமதித்ததன் பேரில் சில கோடிகள் வரை லஞ்சம் வாங்கியிருக்கிறார். சௌராஷ்டிர உணவு எண்ணெய் வணிக மன்னர் ஒருவருக்கு உதவியதன் வாயிலாக ரூ 50 லட்சம் லஞ்சமாக அடைந்தார். ஒரு மத அறக் கட்டளைக்கு நகரநில உச்சவரம்பு சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளித்தது இவருக்குச் சில லட்சங்களை அளித்தது. குஜராத் காங்கிரஸ் பொருளாளர் அசோக் பட்டேல் வழியாக ஒரு ஸ்விட்சர்லாந்து வங்கியில் சோலங்கி ரூ 2 கோடி போட்டிருக்கிறார்.

**ஹரியானா: பஜன்லால்:** ஹரியானா மின்துறைக்கு மின்கருவிகள் வழங்க ஒரு ஜப்பானிய கம்பெனி அனுமதி பெற்றதற்கு ரூ7 5 லட்சம் பஜன்லாலுக்குத் தட்சணை தரவேண்டியதாயிற்று. ரயில்வே காண்ட்ராக்டர், சரளக்குமார் பெருமளவு விற்பனை வரி செலுத்தாமல் நழுவுவதற்கு ரூ 10,000 முதலமைச்சருக்கு மாதந்தோறும் தருகிறார். முதல்வரும், விவசாய அமைச்சரும், உரங்களை சில போலி நிறுவனங்களுக்கு, பொதுத்துறை நிறுவனங்களுக்கு, வழங்கும் விலையில் தருவதன் மூலம் கோடி கணக்கில் பணம் பண்ணி வருகிறார்கள்.

FREE E BOOKS - www.thamizham.net - TM1872 / Dec 2010

# வயிற்று வலி வராமல் தடுப்பது எப்படி?

"வயிற்று வலியால் இளைஞர் துடி துடித்தார், வயிற்று வலி தாங்காமல் இளம்பெண் தற்கொலை" என்றெல்லாம் பத்திரிகைகளில் பார்க்கும் போது பயமாயிருக்கிறது. அந்த வயிற்று வலி வராமல் தடுக்கமுடியாதா?

முடியும். அதற்கான வழிவகைகளை அறிந்து கொள்வதற்கு முன் வயிற்று வலி வருவதற்கான காரணங்களைக் கொஞ்சம் தெரிந்து கொள்ள வேண்டும்.

1 இரைப்பை, டியோடினம் குடற்புண் (ULCER) இது வயிற்றின் நடுப்பகுதியில் வலியைத் தோற்றுவிக்கும்.

2 நாக்குப் பூச்சிகளால் வலி. இது வயிற்றின் நேர் கீழே அடி வயிற்றில் வலிக்கும்.

3 குடல் வால் (Appendix) வீக்கவலி. இது வயிற்றின் கீழே வலது புறத்தில் வலிக்கும்.

4 அஜீரணத்தால் வயிற்றில் தோன்றும் சாதாரண வயிற்றுவலி, இந்தநாலுவகை வயிற்று வலிகளுள் அல்சர்-வயிற்றுவலி கொடியது. இது வந்த பின்காப்பாற்றுவதைவிட வருவதற்குமுன் காப்பது சுலபம்.

இத்தகைய வயிற்றுவலி என்றுமே வராமல் இருக்கக் கீழ்க் கண்டவற்றைக் கடைபிடிக்கவும்.

1 சிகரெட்டு பீடி புகைப்பிடிப்பதை அடியோடு தவிர்க்க வேண்டும். புகையால் வரும் அல்சர் மிகக் கொடியது.

2 நாள்தோறும் காலையில் கீழ்க்கண்ட ஆசனங்களில் ஒன்று இரண்டுச் செய்தால்போதும் தனுராசனம், மயூராசனம் யோக முத்ரா போன்றவை இரப்பை குடல் சதைப்பலம் அளிக்கவல்லது (செய்முறை பழைய சுட்டி இதழ்களில்)

3 மனதை ஒருமைப்படுத்தி நிறுத்தும் தியானத்தை (Meditation) ஒருசில நிமிடமாவது நேரம் கிடைத்த போதெல்லாம் செய்ய வேண்டும்.

4 அத்துடன் சுண்டைக்காய் பாகற்காய் வேப்பங்கொழுந்து போன்ற கசப்புப் பொருட்களைத் தின்னப் பழகிக் கொள்ள வேண்டும்.

—சுட்டி பாரதி

(அடுத்து ஆஸ்த்துமா வராமல் தடுப்பது எப்படி)

# வாசகர் குமுறல்

□ எங்கள் கிராமத்திற்குத் தொலைபேசி வசதி வந்து சுமார் 2 ஆண்டுகள் ஆயிற்று. இது வரையில் "லோக்கல் கால்"களைத் தவிர "ட்ரங்க் கால்" பேசியதே கிடையாது தான். எத்தனையோ தடவைகள் முயன்றும் முடிவு பூஜ்யமாகப் போனதே மிச்சம். அருகிலிருக்கும் திருநெல்வேலிக்குக் கூட தொடர்பு கிடைக்க 4 மணி நேரமாகிற படு மோசமான மந்த நிலை. பல வேளைகளில் எக்ஸ்சேஞ்சில் தொலைபேசியை எடுத்து மேஜை மேல் வைத்து விடும் பரிதாபம். எதற்காக இந்த தொலைபேசி வந்தது? சாதனைப் பட்டியலுக்காகவா? அல்லது சமுதாயத்திற்கு உண்மையாகவே உதவும் நோக்கத்திலா?

—குன்றில் குமார், இருக்கன்துறை-627106

□ நான் மயிலாடு துறையில் வெள்ளரிப் பிஞ்சு விற்பவன். காலை 6 மணிக்கு செடியிலிருந்து பறித்து இரவு 8 க்குள் விற்றே ஆக வேண்டும். மறுநாள் விற்க முடியாது. வாடிவிடும். மக்கள் அதிகம் கூடும் கடைவீதி, பேருந்து நிலையங்களில் தான் விற்று பிழைக்க முடியும். சில மாதங்களுக்கு முன்பு கடை வீதியில் ஒரு கொலை நடந்தது. யாரோ யாரையோ கொன்றதற்கு இப்போதும் போக்குவரத்து இடையூறு என்று சொல்லி எங்களை விற்க விடாமல் விரட்டுகின்றனர். நகராட்சியில் விற்பனைக்கட்டணம் தினசரி ரூ 1 வேறு (சென்ற ஆண்டு 40 பைசா தான்) பெற்றுச் செல்கின்றனர். இச்சூழலில் நாங்கள் பிழைப்பது எப்படி!

—ம. இரவிச்சந்திரன், திருவலஞ்சுழி.

□ குறிஞ்சிப்பாடி பேருந்து நிலையத்திற்குள், பெரும்பாலான பேருந்துகள் வராமல், அருகில் உள்ள சாலையிலேயே பயணிகளை இறக்கி விட்டு திரும்புகிறார்கள் இது குறித்து தெ. ஆ போக்குவரத்து அலுவலருக்கு எழுதியதில், குறிப்பிட்ட பேருந்து உரிமையாளருக்கு அறிவுரை சொல்வதாக பதில் வந்ததே யொழிய நிலைமை மாறவில்லை. காவல்துறைக்கு எழுதியும் செயல்படவில்லை. பல ஆண்டுகளாக பயணிகளை பேருந்துகள் அலைக்கழிக்கும் போக்கிற்கு மேலதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுப்பார்களா?

—குறிஞ்சிப் பாடி இளைஞர் நற்பணி மன்றம்

FREE E BOOKS - www.thamizham.net - TM1872 / Dec 2010

## ஏழு

கதர் சட்டை அணிபவன் காங்கிரஸ் வாதியாம,
கருப்புச் சட்டை அணிபவன் பகுத்தறிவு வாதியாம்,
சிவப்புச் சட்டை அணிபவன் கம்யூனிச வாதியாம்,
சட்டையே இல்லாத நாங்கள்?

—வெ. நாராயணன்

## முன் அனுபவம்

முன் அனுபவம் உண்டா?
முகத்துக்கு நேர் விழுந்த
முதல் கேள்வியே
முனைப்போடு இருந்தது கண்ட
பட்டதாரி இளைஞன்
பணிவோடு பகர்ந்தான்
"ஓ! உண்டே!
இது
இருபத்தைந்தாவது
இண்டர்வியூ!"

—தீபன்

## குப்பைத் தொட்டி

தெருவோரங்களில்
மூலைகளில்
நாதியற்ற நாங்கள்
மேட்டுக் குடியாருக்கு
மட்டுமே குப்பைத் தொட்டி.
காகிதம் பொறுக்கும்
கந்தல் குழந்தைகளுக்கு
நாங்கள்
கஞ்சித் தொட்டிகள்
பெற்றவர் பேர் தெரியாத
பெரிய வீட்டுச்
சிசுக்களுக்கு
நர்சரி பள்ளிகள்

—தாயுமானவன்

## நாய்கள்

மனிதர்களை
போடா நாயே—என்று
விரட்டுபவர் வீட்டில்
நாங்கள்
மனிதர்களாக மதிக்கப்படு
கிறோம்
கன்றி: குடிசை

—செ. சந்திரன்

## முதலாளிகளே!

முயற்சியே எங்கள்
முதுகெலும்பு !
நீங்கள்
"திருவினை" ஆக்க வேண்டாம்
மெய்வருத்தக் கூலி கொடுங்கள்.

—க. கதிர் குன்றன்

# தாய்



'தாய்' பத்திரிகையின் ஆசிரியர் திரு. வலம்புரி ஜான், தனது பத்திரிகை, சுட்டியில் விமர்சிக்கப்படுவதில் ஆர்வம் காட்டி வரவேற்றார். சுட்டி ஆசிரியர்குழு உறுப்பினர்கள் அவரைச் சந்தித்து சுமார் 1 மணி நேரம் பேசியபோது, தன் சார்பில் கூறப்பட வேண்டிய சுயவிளக்கங்களும், ஆசிரியர் குழுவினர் கேட்ட கேள்விகள் அனைத்திற்கும் விவரமான பதிலும் அளித்து விமர்சனத்திற்கு உதவினார். அவர் காட்டிய அன்பும், விருந்தோம்பலும் நன்றிக்குரியவை. பாரபட்சமற்ற முறையில் தாயையும் விமர்சிக்க தடைக்கல்லாக இவரது நேரடி சந்திப்பு இருக்காது என்பதை உறுதிப்படுத்திக் கொண்டோம்.

மசாலா பத்திரிகைகளில் பின்னதாகத் தோன்றிய தாய், சாவி, இதயம் பேசுகிறது. ஆகிய போட்டி பத்திரிகைகளை விற்பனையில் மிஞ்சவிட்டதாக (1,40,000 பிரதிகள்) ஆசிரியர் குறிப்பிட்டார். இதற்குக் காரணம், பிற மசாலா பத்திரிகைகளின் எல்லா வியாபார தந்திரங்களையும் "தாய்" சாறு பிழிந்து பயன்படுத்திக் கொள்வதாகும்.

குமுதம் மாதிரி புதுப்புது உத்திகளும், ராணி மாதிரி பரவலான விற்பனையாளர் விரிவாக்கமும், விகடன் பரணீதரன் பாணியில் தெய்வீக, ஆலய விஷயங்களும், குங்குமம் மாதிரி திருக்குறள் பகுதியும், மங்கை மாதிரி மாதர் விஷயங்களும், கல்கண்டு மாதிரி அதிசயபடத் துணுக்குகளும், சாவி இதயம் மாதிரி சினிமா கவர்ச்சியும் கொண்டு தாய் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதே அதன் ஜனரஞ்சக வெற்றியாகும்.

அ. தி. மு. க வின் அண்ணா அறக்கட்டளை, முரசொலிக்கு எதிர்முகமாக "அண்ணா" நாளிதழையும், குங்குமத்திற்கு சவாலாக 'தாய்' வார இதழையும் நடத்தி வருகிறது. இதற்கு 'தாய்' என்ற பெயரைத் தேர்ந்தெடுத்து, அது தோன்ற முழு முதற்காரணம் எம். ஜி. ஆர் தான். சிவாஜி கணேசன் நடித்த ஒரு படத்தின் பெயரைப்போய் இப்பத்திரிகைக்கு வைத்ததை எம்.ஜி.ஆர் ரசிகர்கள் எப்படி ஏற்றுக்கொண்டார்களோ! மாக்சிம் கார்க்கியின் உலகப்புகழ் பெற்ற நாவலான 'தாய்' தமிழகத்தில் பத்திரிகை வடிவில் அஃறிணையாக்கப்பட்டிருக்கிறது.

FREE E BOOKS - www.thamizham.net - TM1872 / Dec 2010

☐ ஒவ்வொரு மாதமும் 15 ஆம் தேதி சுட்டி வெளிவரும்.
☐ 12 இதழ்கள் அஞ்சலில் பெற ஆண்டு சந்தா ரூ. 4-00
☐ ஆயுள் சந்தா: ரூ 150 (ரூ 25 வீதம் 6 தவணைகளிலும் கட்டலாம்)
☐ எல்லாத் தொடர்புகளுக்கும்:—
ஆசிரியர்குழு, 'சுட்டி' K-105, அண்ணாநகர், சென்னை-600 102

ஆனால் எம். ஜி. ஆரின் செல்வாக்கை நிலைநாட்டுவதும், புதியவர்களுக்குப் பரப்புவதும் 'தாய்' இன் முக்கிய குறிக்கோள்களில் ஒன்ருக நடைமுறையில் தெரிகிறது. விகடனில் வந்த "நான் ஏன் பிறந்தேன்" என்ற எம் ஜி. ஆர் வாழ்க்கை வரலாறு இதில் ஒரு முக்கிய தொடர். திரைப்படச் செல்வாக்கால் மக்கள் மனதில் இடம் பிடித்த எம். ஜி. ஆரை மக்கள் தொடர்ந்து நினைவில் வைக்கவும், அடுத்த இளைய தலைமுறைக்கு வலை விரிக்கவும் தவருமல் இடம் பெறுகிறது: "புரட்சித்தலைவர் நடித்த படங்களில் எனக்குப் பிடித்தபடம்" என்ற தொடர்— ஆண்டு மலரின் எம். ஜி. ஆர் பலவண்ண அட்டைப்படம்

தாய்க்கு என்று ஒரு தனி பாணி இருப்பதாகவும், அது ஒரு குருசேத்திரம் என்றும் பிரச்சனைகள் பலவற்றைத் துணிந்து எழுதி போர்க்குரல் கொடுக்கிறது என்றும், எந்தப் பத்திரிகையையும் விட புதுக்கவிதைகளுக்கு அதிக இடம் கொடுக்கிறது என்றும் ஜான் பெருமைப்படுகிருர்.

அ. தி. மு. க காரர்களை மட்டுமே நம்பி தாய் நடத்த முடியாது என்பதால், மற்றவர்களையும் கவர்ந்திழுக்க—சிறப்பாக அறிவு ஜீவிகளிடம் ஏற்பட்டுள்ள தார்மீக கோபத்தைத் தட்டிக் கொடுப்பதற்காக, சமூக பிரக்ஞையுடன் தாய் சில கட்டுரைகளை வெளியிடும். உண்மையான சமூக அக்கறை இருக்குமாயின் ஒரு பிற்போக்கான அரசியல் கட்சிக்கும் தனி நபருக்கும் எழுத்துக் கூலியாக விளங்கிக் கொண்டும், மக்களை மந்தப்படுத்தி மேலும் மேலும் மயக்கத்தில் ஆழ்த்தும் கவர்ச்சிகளை ஆசை ஆசையாக வெளியிட்டுக் கொண்டும் எப்படி இருக்க முடியும்?

எஸ். ஐ இ. டி கல்லூரி பிரச்சனையை ஆழமாக, விளக்கமாக நியாயமாக வெளியிட்டுதனது சமூக உணர்வை வெளிப்படுத்தியதாகக் காட்டுவதும், மறுபுறம் சிலுக்கு சுமித்தாவிடம் வாசகர்களுக்கு யோகாசனம் கற்றுத்தரச் சொல்வதும் யாரை வசப்படுத்த?

சுட்டி பழைய இதழ்கள் தற்போது 5 முதல் 19 வரை மட்டுமே உள்ளன. அவற்றைப் படிக்க விரும்புவோர் இதழுக்கு 25 காசு வீதம் அஞ்சல் தலைகள் அல்லது பணவிடை (M O) அனுப்பினும் எங்கள் செலவில் உங்களுக்கு அனுப்புகிருேம்.

ஒரு காலத்தில் "சீனம் சிவப்பானது ஏன்?" என்று துடிதுடித்து எழுதிய ஜானின் இடது சாரி கரங்கள் இன்று தாயில் மூகாம்பிகை பக்தியைப் பரப்பி வருகின்றன. பொதுவுடமை பூபாளம் எப்போது என்று அடிவானத்துக்கு அப்பால் நம்பிக்கையுடன் செங்கதிரவனை எதிர்நோக்கியவர், இன்று "நாராயணனை நம்புங்கள்" என்று சொல்லி வாசகரை தாயில் ராசிபலன் பார்க்கச் சொல்கிருர். சின்னப் பெரியவாளிடம் பவ்யமாக சட்டை போடாமல் அமர்ந்து (பக்தியில்) சிலிர்த்துப் போனதாக எழுதுகிருர்.

கட்சி மாறிய மனோகரனைக் கிண்டல் செய்யும் வலம்புரியாரின் கட்சித்தாவல்களும், கருத்துத்தாவல்களும் எழுச்சி நியாயங்களின் எதிர்காலப் பயணங்களென, ஆயிரம் நியாயம் கற்பித்தாலும், ஏற்றுக்கொள்ள முடியாதவை! மாணவகாலத்தில் மார்க்சிய வாதியாக, பின்னர் தி. மு. கழிரங்கிப் பேச்சாளராக மாநிலங்களவை உறுப்பினராக, பின் இருண்ட காலத்தின் கேடயமான இந்திரா காங்கிரஸ் வாதியாக, பின்னர் ஜனதா கட்சி தொண்டராக. பின் கிறிஸ்துவ ஜனநாயக முன்னணியில் இப்போது அ. தி. மு. க. அடுத்து, வரப்போகிற ஆளுங்கட்சியிலா? இதுவரை ஜான் எழுத்துக்களைப் படித்து குழம்பிப்போனவர்கள் 'தாய்' எழுத்தில் அவரைப் புரிந்து கொள்வார்களா?

'தாய்' இதழ் 'ஜான்' என்ற தேர்ந்த எழுத்துக் கலைஞரால் வளர்வது போல, ஜானும் தாயால் வளர்கிருர். 'தாயில்லாமல் நானில்லை' என்பது ஜானைப் பொறுத்தவரை உண்மை தான்! அவரது ஆரவாரமான எழுத்துக்களும், இணையற்ற சொல்லழகும் ஆழ்ந்த புத்தக அறிவும், மிக மலிவாக விலைபோய் விட்டன என்பதை வருத்தத்துடன் உணர்கிருேம். ஜான் இதிலேயே தொடர்ந்தால் ஒரு காலத்தில் குமுதத்தை கூட விற்பனையில் எட்டிப்பிடிக்கலாம்; ஆனால் ஜான் மக்களுக்கு மிகவும் அந்நியமாகிப் போய்க் கொண்டிருப்பார்.

(அடுத்து தினகரன்) —காஞ்சி–நிலா–எழில்

FREE E BOOKS - www.thamizham.net - TM1872 / Dec 2010

# எங்கள் சஹாரா இங்கே இருக்கிறது

## நூல் விமர்சனம்

அறிவு ஜீவித்தனமாக, புரியாமையை இலக்கியக் கொள்கையாகக் கொண்டு வெளியாகும் புதுப்புதுக் கவிதைகள் மத்தியில் எளிமையும், எதார்த்தமும், பொதுமக்களை உடனே உசுப்பும் உத்வேகமும் கொண்டு வெளிவந்துள்ளது இரா. கதைப்பித்தனின் இந்தக் கவிதைத் தொகுப்பு.

சகாராவின் ஒட்டகங்களாவது ஒரு வாரத் தண்ணீரை உடம்புக்குள் தேக்கி வைக்க ஓரளவு வசதி உண்டு. ஆனால் இங்கே உள்ள சஹாராவில், எங்கள் எருமைகள் அடுத்த வேளைத் தண்ணீருக்கு கொதிக்கும் வெயிலில் கானல்நீரை வெறித்தபடி கண்டபடி அலைகின்றன என்று சஹாராகிவிட்ட நமது வாழ்வை படம் பிடிக்கிறார்.

இவர் கவிதைகளின் உஷ்ண வார்த்தைகள் வரிந்துகட்டிக் கொண்டு வந்து அவர் சொல்லவந்த விஷயத்தின் அழுத்தத்திற்கு சிபாரிசு செய்கின்றன. அத்தகைய சில வரிகள் :—



வேலையினைத் தேடிப்போனால் வேளை வரட்டும் என்கிறார்?  
என்றைக்கு வேலை வரும்?  
தானாக ஒரு வேலை தங்களுக்கு வரும் என்று, நீர் ,  
வீணாகக்காத்திருந்தால்  
உங்கள்,  
தலையும் நரைந்து விடும்! தாடி கூட வெளுத்துவிடும்  
கல்யாண மாயிருந்தால் கட்டிய மனைவி கூட காறித்துப்பிவிட்டு  
காணாமல் போயிருப்பாள்!  
வேலைதர வக்கின்றி நாளுக்கொரு அறிக்கையை  
நாக்கை வழிப்பதற்கா நாளிதழில் விடுகின்றீர்

பரிதாப நிலைமைகளை எரிச்சலோடு சொல்லும் வரிகளைப் போல, அங்கத உணர்வோடு சொல்லும் வரிகளும் நெஞ்சில் நிலைக்கின்றன. ஓர் எடுத்துக்காட்டு :—

கடந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் காலங்கள் மூன்று என  
இலக்கண வாத்தியார், கற்பித்த பின் கடைசியில் கேட்டார்!  
"ஏழுமலை நீ, சொல்? நீ குடிசையில் வசிக்கிறாய்! இது என்ன  
காலம்?" "அதுவா சார்? அது என் போதாத காலம்!  
வசந்த காலம் வருமா சார்?"

வெளியீடு: விஸ்வசாந்தி பதிப்பகம்: ஆசிரியர் முகவரி: இரா. கதைப்பித்தன், 101, தெற்கு சம்மந்தபுரம், இராஜபாளையம்-626117 விலை. ரூ 4-00

# பறக்கும் தட்டுகளும் ஹைனெக்கும்

பறக்கும் தட்டுக்கள் என்பவை இருக்க முடியாது. எனவே அவை இல்லை! என்ற மூர்க்கமான முடிவுடன் தன் பறக்கும் தட்டு ஆய்வுகளை தொடங்கியவர் டாக்டர் ஜே. ஆலன் ஹைனெக் என்ற வானியல் பேராசிரியர். அமெரிக்க விமானப்படையின் பறக்கும் தட்டு ஆய்வில் ஆலோசகராக முதலில் நியமிக்கப்பட்ட இவர் எல்லா பறக்கும் தட்டு நிகழ்வுகளையும் "விஞ்ஞான ரீதியாக விளக்கி விடுவதில்" சமர்த்தராக இருந்தார். ஆனால் நாளடைவில் அவரது அணுகுமுறையில் மாற்றம் ஏற்பட்டது. ஏனெனில் அவரால் 90% நிகழ்வுகளே ஆய்வு பலூன்கள், விண்கற்கள், மற்ற இயற்கை நிகழ்வுகள் என்று விளக்கப்பட்டாலும் 10% நிகழ்வுகளை அவரால் சாதாரணமாக மேற்கூறிய நிகழ்வுகளாக விளக்க முடியவில்லை. பின்பு அவை என்ன! அவை வேறு உலக ஜவ்'களின் வாகனங்களாக இருக்கக்கூடும் என்பது அவரது ஹேஷ்யம்.

சிறிது காலத்திற்கு முன், லவாய்சியர் என்ற விஞ்ஞானி வானிலிருந்து கற்கள் விழுவதாவது? மடத்தனம், அவை வானில் எங்கிருக்க முடியும்! என்றார். ஆனால் இப்போது



4-வது வகுப்பு சிறுவனுக்குக் கூட விண்கற்களைப் பற்றிய உண்மை பாலபாடம். ஒரு சில நூற்றாண்டுகளுக்குப் பிறகு பறக்கும் தட்டு நிகழ்வுகளும், பாலபாடமாக இருக்கலாம்!

—ரமேஷ்

(பறக்கும் தட்டுகள் பற்றி வெளிவந்த "The Close Encounters of the third kind என்ற திரைப்படத்தின் விஞ்ஞான ஆலோசகர் டாக்டர் ஹைனக். படத்திலும் ஒரு காட்சியில் சிறிது நேரம் தோன்றுகிறார்.)

FREE E BOOKS - www.thamizham.net - TM1872 / Dec 2010

# போலி உபசரிப்பு-பண்பாடு?


நாம் பண்பாடு என்ற பெயரில் கொண்டுள்ள சரியில்லாத அநேக விஷயங்களில் போலி உபசரிப்பு என்பதும் ஒன்று. சொல்வது ஒன்று செய்வது ஒன்று. உள்ளத்தில் இருப்பது வேறு ஒன்று என்பதைத்தான் நாம் பண்பாடு என்று சொல்லிக் கொள்கிறோம். ஒருவர் வீட்டில் சாப்பிடும்போது மற்றொருவர் அங்கு வந்தால் உடனே சாப்பிட்டுக் கொண்டிருப்பவர் உபசரணையாக "வாங்க சாப்பிடறீங்களா!" என்று கேட்பார், அப்படி கேட்டால்தான் பண்பாடு என்று தவறாகக் கொண்டிருக்கிறோம். சாப்பிட்டுக் கொண்டிருப்பவர்க்கு நன்றாகத் தெரியும். இருக்கும் உணவு வந்தவருக்குக் கொடுக்க போதாது என்பது. வந்தவர் நல்ல பசியில் இருந்தாலும் அவருக்குத் தெரியும் இந்த அழைப்பு போலி என்பது எனவே, அவரும் போலியாக "இப்பதாங்க சாப்பிட்டுட்டு வர்றேன் கைகூட காயலை" என்பார்.

கல்யாணம் என்றால் திட்டிக்கொண்டு கடன்பட்டாவது மொய் எழுதிவிடுவது—நெருக்கடியான நிலையில் ஆஸ்பத்திரிக்கு போக 5 ரூபாய் கைமாற்று கேட்டால் மறுப்பது, உண்மையிலேயே சாப்பிட்டு விட்டு வந்த நேரத்தில் டீ, காபியை வற்புறுத்தி தொல்லை கொடுப்பது; களைத்திருக்கும் நேரத்தில் ஒரு காப்பி கேட்டுக்குடிக்க இயலாமல் இருப்பது—இப்படி போலியாக எவ்வளவோ துன்பங்கள் சொல்லிக் கொண்டே போகலாம்.


பண்பாடு—உபசரிப்பு என்ற பெயரில் தொல்லை கொடுப்பது என்பதும் ஒழிக்க வேண்டிய முக்கியமான ஒன்று. அவசர வேலையாக சென்று கொண்டிருந்தால் வழியில் உள்ள வீட்டில் உள்ளவர் கையைப் பிடித்து உள்ளே இழுத்துச் சென்று ஆ ஊ. என்று பேசி நம் வேலையைக் கெடுப்பதுடன் அவரும் போகவேண்டிய இடத்துக்குத் தாமதமாகப்போய், "கிளம்பும்போது ஒரு தெரிந்தவன் வந்து தொலைத்துவிட்டான். கழுத்தறுப்பாகப் போய்விட்டது" என்று புலம்புவார்.

இந்த மௌடீகமான 'போலி உபசரிப்பு பண்பாடு' ஒழிக்கப்பட்டு, உண்மையான மனிதத்தேவையையும், அன்பையும் வெளிப்படுத்துகிற, பண்பாட்டையே, பண்பாடாக ஏற்க முடியும்.

—சுயராஜ்



# மிஸ்ராவின் பதினோராவது சட்டம்



பீஹார் அரசு அண்மையில் அரங்கேற்றிய செய்தித்துறைக் கருப்புச் சட்டம் இப்போது அகில இந்திய சர்ச்சையாக உருமாறியுள்ளது.

ஆளும் வர்க்கத்தின் ஊழல் மக்களை அடையாமல் தடுக்கப்படுவது புதுமையல்ல.

'ஊழல்பற்றி எழுதுவது கண்டிக்கத்தக்கது. அரசு எந்திரத்தின் ஆமை வேகத்தைச் சுட்டுவது ஆபாசம். தலைமைப் பீடங்களின் கோமாளித்தனங்களை அம்பலப் படுத்துவது கோமாளித்தனம்' என்று காரணம் காட்டி பீஹார் அரசு முன்வைத்துள்ள சட்டம் தமிழக அரசின் கறுப்புச் சட்டத்தை அடியொற்றி வந்ததாகக் கூறப்படுகிறது.

அரசாங்க அடிமை ஏடுகள், ஆளுங்கட்சி பீரங்கிகளாக நின்று எதிர்கட்சிகளை எழுத முடியாத மொழியில் சாடும்போது இல்லாத ஆபாசமா?

மந்திரக்காரர்களை வாரியத் தலைவர்களாக்குவதையும், தந்திரக்காரர்கள் பின்னால் முதல்வர்கள் சுற்றுவதையும், பொதுத்துறை சுரண்டல்களையும், சூறையாடல்களையும் மக்கள் முன் வைக்க முயலும் செய்தியாளன் சமூக விரோதி. இது தான் கறுப்புச் சட்டத்தின் கணிப்பு.

இதன்படி மேற்படி செய்திகளைத் தருவோரும், வெளியிடுவோரும், விற்பனையாளரும் — ஏன் படிப்போரும் கூட ஜாமீன் பெற முடியாத குற்றவாளிகள்.

(முதல்வரின் நம்பிக்கைக்குரிய) தனி நீதிபதிகளால் விசாரிக்கப்பட வேண்டியவர்கள்.

இதுதான் ஜகன்னாத் மிஸ்ராவின் பொன்னான பதினோராவது கட்டளை.

இதன்படி வெளி மாநில ஏடுகள் கூட பீஹாரில் நடமாட முடியாத அளவு இருட்டடிப்பு.

45 நிமிடம் மிஸ்ரா ஆற்றியதாகக் கூறப்படும் உரையும், சட்டமூலமும் சட்டமன்றத்தில் ஏற்பட்ட அமளிதுமளியில் 5 நிமிடங்களுக்குள்ளாக அரங்கேற்றப்பட்ட அதிசயம் சட்டமன்ற வரலாறு காணாத விந்தை.

FREE E BOOKS - www.thamizham.net - TM1872 / Dec 2010

## ‘சுட்டி’ இலவசமாக அனுப்புங்கள்

‘சுட்டி’யை இன்னும் படிக்காத நண்பர்கள் உங்களுக்கு இருக்கிறார்களா?
அவர்களுக்குச் ‘சுட்டி’யை அறிமுகப்படுத்த விரும்புகிறீர்களா? சுட்டியை நிச்சயம் வரவேற்கக் கூடியவரா?

அப்படியானால் அவர்கள் முகவரியை எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். எங்கள் செலவில் இலவசமாக ஒரு மாதிரி இதழ் உங்கள் சார்பாக அனுப்புகிறோம். அஞ்சலட்டையின் மேல் **மாதிரி இதழ்** எனக் குறிப்பிடவும்.

ஒருவர் எவ்வளவு நண்பர்களின் முகவரி வேண்டுமானாலும் அனுப்பலாம்.

ஆசிரியர்கள் பத்திரிகையாளர்கள், வழக்கறிஞர் முதலியோர் நடத்திய கண்டன ஆர்பாட்டங்களை தடியடி செய்து தடுத்து விட்டால் உண்மைகள் உறங்கி விடுமா?

பறிக்கப்பட்ட பத்திரிகைச் சுதந்திரம் அண்மையில் பாராளுமன்றத்திலிருந்து ஆளுங்கட்சியை விரட்டியெறிந்த வரலாறு நினைவில்லையா?

உடைத்தெறியப்பட வேண்டிய ஊழலமைப்புகளை ஊருக்குத் தெரியாமல் மறைக்க ஒரு சட்டமா?

நீதியின் குரலை நிலைக்கச் செய்ய வேண்டிய அரசுகளே பயிரை மேயும் வேலிகளாக மாறும் அவலங்களை மக்கள் அறியாமல் தடுக்க அமைச்சர்களே ஆதிக்கச் சுவர்களா?

எண்ணிலடங்கா ஏழை மக்களை வறுமைக்கோட்டின் கீழ் வைத்துள்ள நிர்வாகச் சீர்கேடுகள்—

காக்கும் கரங்களே கண்ணைப்பிடுங்கிய அங்கீகாரம் பெற்ற கொடூரங்கள் (பகல்பூரில் கண்களை குருடாக்கிய நிகழ்ச்சி)

இவைகளைப்பற்றி எழுதுவது குற்றமா? மீண்டும் வரப் போகின்ற அவசரநிலை ஏற்பாடுகளின் தவணைமுறை முன்னுரைகளா இந்தச் சட்டங்கள்?

ஒன்று நிச்சயம்.

பிளவுச்சக்திகளாலும், பிரிவுச்சக்திகளாலும் துண்டாடப்பட்டு சகோதரர் மீதே சேற்றை வாரிப்பூசும் செய்தித்துறைச் சகோதரர்கள் நாடு தழுவிய ஒற்றுமையுடன் இவைகளை எதிர்க்காவிடில் தங்கள் கடமையிலிருந்து தவறியவராவார்கள்.

—**சரவணபவன்**


## காது நன்றாகக் கேட்க வேண்டுமா?

காது மந்தத்தன்மை மிகவும் மோசமாகும் வரை காத்திருக்காதீர்கள். நாங்கள் உதவி செய்ய காத்திருக்கிறோம்.

**இயர் எய்ட்ஸ்**

4, வடக்கு உஸ்மான் ரோடு,
தி. நகர், சென்னை-600 017


## எமக்கு வந்தவை

**துடிப்பு :** (மாதமொருமுறை) இ. கி. மா/இ.மா.இ அலுவலகம், புனித அந்தோணியார் ஆலயம், குன்னூர், நீலகிரி-643 102 ஆண்டுச்சந்தா : ரூ 5.

**தாய்மண் :** (மாத இதழ்) கவிஞர் அரு. அருணைநாதன், 10, சோமசுந்தர விநாயகர் கோயில் 2-வது தெரு சென்னை-600 011 தனியிதழ் : ரூ 1 ஆண்டுக்கட்டணம் : ரூ 10.00

**நிறைமதி :** (கலை இலக்கியத் திங்களிதழ்) 57, சூளை நெடுஞ்சாலை, சென்னை-600 112 தனியிதழ் : ரூ 1 ஆண்டுக்கட்டணம் : ரூ 10.00

**இயலிசை :** (இசைக்கலை உலக தமிழ் மாதமிருமுறை) 57, தெற்கு சிவன் கோயில் தெரு, கோடம்பாக்கம், சென்னை-600 024 தனியிதழ் : 50 காசு. அரை, முழு ஆண்டுக் கட்டணங்கள் : ரூ 5.00; ரூ 10.00

**நான் போட்ட கோடு :** (புதுக்கவிதைகள்) ப்ரதிபா ஜெயச்சந்திரன், ஸ்வரம் இதழின் பின் பகுதியாக இணைப்பு-ஸ்வரம், நந்தலாலா, J. S. S. கல்லூரி ராக்லேண்ட்ஸ், உதகை-643 001.

**துளிகள் :** (இலவச மாதஇதழ்) தனிச்சுற்றுக்கு துரைபாரதி, விசுவநாதபுரம், 18 மடவிளாகம், திருவிடைமருதூர்-612 104




இவளும்
ஒரு
கண்ணகி தான்!
ஆம்,
தான் இறந்தாலும்
தன்னைப் புகைத்தவர்களை
சீக்கிரம்
புதைத்து விடுவதால்
இவளும்
ஒரு
கண்ணகி தான்!

இந்தக் கவிதை எமக்கு வந்த நனவுகளும் கனவுகளும் என்ற கவிதைத் தொகுப்பில் இடம் பெறுகிறது. கவிதாசன் என்ற மாணவக் கவிஞரின் உத்வேகமும், உசுப்பலும் நிறைந்த கவிதைகள் பாராட்டிற்குரியவை :

முகவரி : K. G. சாவடி அஞ்சல் மதுக்கரை கோயம்புத்தூர்
விலை : ரூ 3.50


FREE E BOOKS - www.thamizham.net - TM1872 / Dec 2010

லேட்ரூஃப்
எக்ஸ்போ-டெல்
குறைந்த செலவில் சிறந்த கூரை அமைக்க
உயர்தர ஏற்றுமதி ரக அஸ்ஃபால்டிக் கூரைச்சாதனமான எக்ஸ்போ-டெல் அயல்நாட்டு தொழில்நுட்ப கூட்டுறவுடன் தயாரிக்கப்படுகிறது
பொருத்துவது எளிது. செலவு குறைவு, நீடித்த உழைப்பு. எக்ஸ்போ-டெல்-8 வளைவுகளோடு 4 அடி (122cms) மற்றும் 6 அடி (183cms) நீளத்தில் கிடைக்கிறது. எந்தப் பருவக் காலத்திற்கும் ஏற்றது; தீயினால் பாதிக்கப்படாதது. விரியாது, தொய்ந்து போகாது, உடையாது. கல்ஃப்ரெட் நிறத்தில் கிடைக்கும்.
இதர வகைகள் : ஜனதா, பாப்புலர், டீலக்ஸ்
மற்ற விவரங்களுக்கு தொடர்பு கொள்க:
லேட்ரூஃபிங்ஸ் லிமிடெட்
அஸ்ஃபால்டிக் கூரைத்தகடுகள் தயாரிப்பில் முன்னோடி நிறுவனம்
பதிவு அலுவலகம் : 226, லாயட்ஸ் சாலை, சென்னை-600 086
கிளை அலுவலகங்கள் :
4, டி.டி.ஏ. ஷாப்பிங் சென்டர், புது டெல்லி 110 021 ● ப்ளாக் ஏ/2 த்வாரகாபுரி, எல்.பி. சாஸ்திரி மார்க், குர்லா பம்பாய் 400 070. ● எண். 15, 8வது மாடி, 23-ஏ, நேதாஜி சுபாஷ் சாலை, கல்கத்தா 700 001.

# கல்லூரித் தேர்தல்

சிலவருடங்களுக்கு முன் மிகவும் சாதாரணமாக நடத்தப்பட்டு வந்த கல்லூரி தேர்தல்கள் தற்போது ஆடம்பரமாக நடத்தப்பட வேண்டும் என்பது கட்டாயமாகி விட்டது.

சிலகல்லூரிகளில் கட்சியின் சார்பாக மாணவர்கள் நிற்பதால் பலத்த போட்டியும், பரபரப்பும் உண்டாகின்றன. கட்சிக்காரர்கள் இவர்களை ரெடிமெட் உணவுப் பொட்டலங்களைப் போலப் பயன்படுத்துகிறார்கள்.


குறைந்தது ரூ 5000 முதல் ரூ 20,000 வரை செலவு செய்வது சாதாரணமாகி விட்டது ஆனால் காசு கொடுத்து ஓட்டு வாங்கும் ஈனபுத்தி இவர்களிடமில்லை. இதற்குப் பதிலாக பல சாராயக் கடைகள் காலி செய்யப் படுகின்றன. சமீபத்தில் ஒரு கல்லூரியில் பெரிய சாராயப் பானை ஒன்றுக்கு மாலை போட்டு மாணவர் பட்டாளமே சுற்றி கும்மாளமிட்டு ஊர்வலம் வந்து கல்லூரியில் வைத்து பாரபட்சமின்றி இளம்தலை முறைக்கு இலவசமாக விநியோகம் செய்ததைக் கண்டபோது நம் நம்பிக்கை உடைந்து போகிறது.

தற்போது புது மாணவர்களுக்கு ராகிங் தவிர்க்கப்பட்டு வரவேற்பு அளிப்பதற்கு காரணமும் ஓட்டு பெறுவதற்காகத்தான் என்று சொல்லப் படுகிறது. தேர்தல் முடிவுகளுக்குப் பின் ஏற்படும் மோதல்கள் நம்மை மிகவும் அதிர வைக்கின்றன. சென்ற ஆண்டு இருந்த பகை சம்பந்தமாக மதுரை தியாகராஜா பொறியியற் கல்லூரியில் மாணவ தலைவரும் செயலரும் கொலை செய்யப்பட்டது தெரிந்ததே!

மாணவர்கள் ஒற்றுமையைக் குலைக்கும் வண்ணம் தங்களுக்குள் முரண்பட்டு, அடிப்படை பிரச்சனைகளைப் பற்றி பிரக்ஞையின்றி, இருக்கிறார்கள். மின்விசிறி வேண்டும் வாட்டர் கூலர் வேண்டும் என / வாரம் போராடும் மாணவர்கள், தங்கள் எதிர்காலத்தையே மோசடி செய்யும் பாடத்திட்டங்களை மாற்றவோ, ஊழல் நிறைந்த பல்கலைக் கழக அமைப்பை எதிர்த்தோ, இதுவரை ஒன்றிணைந்து போராட முன் வரவில்லையே!

—இரா. முரளி

FREE E BOOKS - www.thamizham.net - TM1872 / Dec 2010






1872 / Dec 2010
http ://www.thamizham.net
FREE E · BOOKS (TAMIL)
தமிழ்க்கனல்

FREE E BOOKS - www.thamizham.net - TM1872 / Dec 2010

வெளியீடு: மாத இதழ் 16, செப். 1988 Regd. No. TN/MS(N)/317
Licensed to post without prepayment Licence No: TN/MS(N)WPP-58



# Sakthi Sugars Limited

## A PACE SETTER for RURAL PROSPERITY

SAKTHI SUGARS motivates the farmers to adopt innovative technology for cultivation of sugarcane. The yield of sugarcane has improved to 45 tonnes from 28 tonnes enabling the farmers to earn an additional income of Rs. 3000 Per acre

SAKTHI SUGARS provides the thrust for rural development by distributing over RS. 12 crores as sugarcane price anntally and generates rural employment to over fifty thousand families in the primary, secondary and tertiary sectors

SAKTHI INSTITUTE OF TECHNOLOGY developes technical skill while KAILASAM HOSPITAL Provides medical care for the region under the rural development programmes.

Admn, Office:
73-A, Race Course Road,
Coimbatore-641 018.

Factory:
Sakthinagar-638 315.
Periyar District.

FREE E BOOKS - www.thamizham.net - TM1872 / Dec 2010